சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:21.08.2024

PW1: வரதராஜன் த/பெ– சீனிவாசன்

**<u>மனுவின் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே நடந்ததாக கூறும் செல்போன் உரையாடல் சம்மந்தமாக சூலக்கரை காவல்நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்தது சம்மந்தமாக பிரதிவாதி மனு தாக்கல் செய்து அதன் பேரில் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பல நபர்களுக்கு கந்துவட்டிக்கு கடன் கொடுப்பதாக காவல்நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் இல்லை. அந்த கடன்கள் சம்மந்தமாக நான் வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன், அதன் எண்ணிக்கை ஞாபகம் இல்லை. கந்துவட்டிக்காக காசோலை வழக்குகளும் பல பேர் மீது நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பிரதிவாதி கூறினார் என்றால் இல்லை. நான் காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்ததில்லை. சூலக்கரை காவல்நிலையத்தில் நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், ஆனால் அதில் உள்ள வாசகங்கள் நான் எழுதவில்லை. 04.09.2015 ல் நான் கையொப்பம் செய்தேன் என்றால் அந்த கையெழுத்து போட்டதாக எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினம் காவல்நிலையத்தில் என்ன சொன்னேன் என்று ஞாபகமில்லை. அந்த வாக்குமூலத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மீசலூரை சேர்ந்த திருவேங்கட ராமானுஜம் மகன் கிருஷ்ண ராமானுஜம் மூலம் சூலக்கரைமேடு முனியம்மாள் கணவர் சுப்புராஜ் என்பவர் அறிமுகமாகி குடும்ப நண்பர்களாக பழகி வந்தோம் என்று

கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதியின் கணவர் பெயர் மறந்துவிட்டது. பிராதில் பிரதிவாதியின் கணவர் பெயர் சுப்புராஜ் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதியின் கணவர் பெயர் நன்றாக தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்புராஜ் குடும்பத்தினருடன் குடும்ப நண்பர்களாக பழகி வந்தோம் என்று வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் ஞாபகமில்லை. அவர்கள் குடும்பத்தினருடன் குடும்ப நண்பராக பழகவில்லை. தாவா பரிவர்த்தனைக்கு முன்பு பிரதிவாதியுடன் பழவழக்கம் இருந்தா என்றால் பழக்கவழக்கம் இருந்ததால் தான் கொடுத்தேன். அவ்வாறு பழக்கவழக்கம் இருந்ததால் சிறு,சிறு தவணையாக 50, 100 ரூபாய்கள் கொடுத்து வாங்கியதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு சுப்புராஜ் கையெழுத்திட்ட புரோநோட் ஒன்றையும் அவர் மனைவியிடம் கொடுத்ததாகவும், பிரதிவாதி முனியம்மாளிடம் ரூ.4 லட்சத்திற்கான புரோநோட்டை பூர்த்தி செய்யப்படாமல் கையெழுத்து வாங்கியதாகவும், என் மீது பிரதிவாதி காவல்துறை கண்காணிப்பாளரிடம் இது சம்மந்தமாக விசாரணையில் ஆஜராகி விசாரணையை என்னிடம் இருக்கும் ஆவணங்களை கொண்டு நீதிமன்றம் மூலமாக வழக்கு தொடர்ந்து மேற்படி கொடுக்கல், வாங்கல் பிரச்சனைக்கு தீர்வு தேடிக்கொள்கிறேன் என்று வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு வாக்குமூலம் கொடுத்த பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனக்கு ஞாபகமறதி அதிகமாக இருப்பதால் வழக்கு பரிவர்த்தனை மீது நான் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் எதிர்வழக்குரையயை நான் படித்து பார்த்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்ன சொல்லியுள்ளார் என்று நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. 17.03.2015 ம் தேதி காலகட்டத்தில் என்னிடம் செல்போன் இருந்தது. அப்போது என்னுடைய செல்போன் இணைப்பு எண்.9486636418 என்றால் சரிதான். பிரதிவாதியின் செல்போன் எண்.9994295453 என்றால் இருக்கலாம். நான் பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக சொல்லும் காலத்திற்கு பிறகு செல்போன் மூலம் பேசினேனா என்றால் இல்லை. எப்போதாவது செல்போனில் பிரதிவாதியிடம் பேசியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய 12.03.2015 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை 16.03.2015 ல் பிரதிவாதி பெற்றுக்கொண்டு மறுநாள் 17.03.2015 காலை சுமார் 7.45 மணியளவில் பிரதிவாதியின் செல்போன் எண். 9994295453 மூலம் என்னுடைய செல்போன் எண்.9486636418 க்கு பிரதிவாதி பேசினார் என்றால் இல்லை. அவ்வாறு பேசும்போது பிரதிவாதி என்னிடம் என் கணவர் சுப்புராஜ் ரூ.40 ஆயிரம் தரவேண்டும் என்று கூறி என்னிடம் கையொப்பம் வாங்கிவிட்டு ரூ.4 லட்சம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளீர்கள் என்று கேட்டார் என்றால் இல்லை. அதற்கு நான் கந்துவட்டி கணக்கிற்கு ரூ4 லட்சம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளேன் என்றும், நீதிமன்றத்திற்கு சென்றால் செலவு செய்ய வேண்டும் என்றும், எனவே பணத்தினை செலுத்திவிடுங்கள் என்று பிரதிவாதியிடம் நான் சொன்னதாக சொன்னால் சரியல்ல. அந்த விபரம் பிரதிவாதியின் செல்போனில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் நான் பேசவில்லை. மேற்படி விபரங்களை

பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதை மறுத்து நான் கூடுதல் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த விபரங்கள் உண்மை என்றும், அதனால் தான் நான் அதை மறுக்கவில்லை என்றால் சரியல்ல. செல்போன் உரையாடல்களை எழுத்தாக பதிவு செய்து நோட்ரிக் பப்ளிக்கிடம் சான்று பெற்று எனக்கு அறிவிப்பு கொடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தெலுங்கு மொழி பேசுவேன். எனக்கு தாய்மொழி தெலுங்கு ஆகும். பிரதிவாதிக்கும் தெலுங்கு தான் தாய்மொழி என்றால் எனக்கு தெரியாது, ஆனால் தெலுங்கில் பேசுவார். பிரதிவாதி என் சமூகத்தை சேர்ந்தவரா என்று எனக்கு தெரியாது. நானும், பிரதிவாதியும் தொலைபேசி உரையாடலை தெலுங்கில் தான் பேசினோம் என்றால் நான் பேசவில்லை. அந்த உரையாடலை நீதிமன்றத்தில் Demonstrate செய்து காட்ட பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது என்றால் கேள்விப்பட்டேன். அதை ஒலிபரப்பினால் அது என்னுடைய குரல் தானா என்று என்னால் சொல்லமுடியும். அந்த குரலை நிபுணருக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய என்னுடைய குரல் மாதிரியை கொடுக்க நான் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். (வாதி தரப்பில் ஏற்கனவே இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சிடி-யில் உள்ள ஒலிபதிவினை மடிக்கணினியில் Speaker மூலம் போட்டு காட்டியதில் அதை சுமார் 2 நிமிடம் கேட்டுவிட்டு சாட்சி அதில் உள்ள ஆண்குரல் தன்னுடையது அல்ல, நான் பேசவே இல்லை என்று கூறுகிறார். அதில் உள்ள பெண்குரல் பிரதிவாதியின் குரலா என்று எனக்கு தெரியாது). நானும், பிரதிவாதியும் 17.03.2015 ம் தேதி காலை 7.44.23 முதல் 8.48.35 மணிதுளிகள் வரை உரையாடிய மேற்படி உரையாடல்கள் உண்மை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக

அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த உரையாடல்களில் பிரதிவாதி என்னிடம் 10 நாள் முன்பு தானே கையெழுத்து வாங்கினீர்கள் என்று கேட்டதாகவும், அதற்கு நான் வாங்கிட்டு போனேன்மா அதற்கு முன்பு உள்ள பணத்திற்கு வட்டி போடணும்ல, சும்மாவா கொடுப்பாங்க என்று கூறியுள்ளேன் என்றால் நான் பேசவே இல்லை. பிரதிவாதி மேற்படி உரையாடலில் என்ன மாமா அவர் இருக்கும் வரை நான் வட்டி கட்டி கொண்டு வந்தேன், அன்றைக்கு நீ வந்து நீங்க அவர் இறந்துபோய்டாருமா, என் ரூபாய்க்கு ஏதாவது ஆதாரம் வேணும்லமானு கேட்டீங்க. நானும் சரி ரூ.40 ஆயிரும் தானே என்று எனது பையனையும் பொண்ணையும் கேட்காமா தானே கையெழுத்து போட்டுக் கொடுத்தேன் என்று போனில் பேசினேனா என்றால் நான் பேசவே இல்லை. பிரதிவாதி மேற்படி உரையாடலின் போது 2 அல்லது 3 தடவைகள் கையெழுத்து வாங்கும் போது வெறும் பத்திரத்தில் தான் கையெழுத்து போட்டதாகவும், பிள்ளையங்கக்கிட்ட கேட்டு கூட கேட்கமால் கையெழுத்து போட்டதாகவும், மேற்படி தொலைபேசி உரையாடலில் பேசினரா என்றால் நான் பேசவே இல்லை. அந்த உரையாடலின் போது நான் வட்டி கணக்கிட்டால் ரூ.6 லட்சம் ஆகும் என்றும், நீதிமன்றத்திற்கு சென்றால் ரூ50 ஆயிரம் கட்டணும் என்றும், அதையும் தெரிந்துங்க என்று நான் சொன்னேன் என்றால் நான் பேசவே இல்லை. அந்த உரையாடலில் பிரதிவாதி சுமார் 3 தடவை தன் கணவர் என்னிடம் எவ்வளவு தான் பணம் வாங்கினார் என்று கேட்டதாகவும், அதற்கு நான் நீதிமன்றத்திற்கு வாங்க பார்த்து கொள்ளலாம் என்று தொலைபேசி உரையாடலில் பதிவாகியுள்ளது என்றால் நான் பேசவே இல்லை. 2 வட்டிக்கு கொடுத்து கணக்கிட்டு நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளேன் என்று நான் பேசியதாக

பதிவாகியுள்ளது என்றால் நான் பேசவே இல்லை. மேற்படி உரையாடலில் பிரதிவாதி நான் கைநீட்டி வாங்கினேனா என்று கேட்ட போது நீங்க வாங்கல நீங்க வாங்கலமா உங்க வீட்டுகாரங்க வாங்கி உங்ககிட்ட தானா கொடுத்தாரு அதற்கு நீங்க தான் பொறுப்பு என்று பதிவாகியுள்ளது என்றால் நான் பேசவே இல்லை. உரையாடலின் முடிவு பகுதியில் பிரதிவாதி முனியம்மாள் நான் வாங்குனேனா சொல்லுங்க என்று கேட்டதாகவும், நீங்க வாங்கலைனா விட்டிருங்க என்று நான் சொன்னதாகவும், மீண்டும் பிரதிவாதி உங்ககிட்ட வாங்கினேனா எனக்கு நீங்க கொடுத்தீங்களாக என்று கேட்டதாகவும், அதற்கு நான் உங்க வீட்டுகாரங்க வாங்கி உங்ககிட்ட தான் கொடுத்துருப்பாரு அதற்கு நீங்க தான் பொறுப்பு என்று கேட்டதாகவும், மேலும் பிரதிவாதி என்னவோ அவ்வளவு விபரம் இல்லாமல் தான் நான் இப்படி இருக்கிறேன் என்று கூறி தொலைபேசி உரையாடல் முடிந்தது என்றால் நான்  பேசவே இல்லை. மேற்படி உரையாடல் பதிவுகளை பிரதிவாதி மோசடியாக தயார் செய்ததாக காவல்நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி உரையாடலில் பிரதிவாதியின் கணவர் ரூ.40 ஆயிரம் வாங்கியதை நான் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் நான் பேசவே இல்லை. பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு அவரிடம் வரவு செலவு இருந்ததாகவும், அதில் பாக்கி இருந்ததாகவும் பிரதிவாதியை ஏமாற்றி பேசி தாவா புரோநோட்டை பூர்த்தி செய்யாமல் கையொப்பம்  மட்டும் பெற்றுக்கொண்டு என் விருப்பம் போல் பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.